**மஹவ பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 நவம்பர் 15 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தலில் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 105,000 பெறுமதியான 06 காணிகளின் பெறுமதி இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மஹவ, வியாபார கடைத் தொகுதியுடன் காணி மற்றும் அம்பனபொல பிரதேச சபை உப அலுவலகத்துடன் கூடிய காணி முறையே ரூபா 2,595,000 மற்றும் ரூபா 2,157,967 ஆக இருந்த போதிலும், ரூபா 22,487,967 கூட்டுப்பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 44 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குச் சொந்தமான ரூபா 1,060,000 பெறுமதியான உழவு இயந்திரத்தின் பெறுமதி ரூபா 240,000 என கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 14 தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் ரூபா 336,955 ஆன பெறுமதி ரூபா 73,781 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 493,062 தொகையான 4 முன்பள்ளி உபகரண விடயங்கள் உப அலுவலகங்களில் ரூபா 486,305 ஆன சொத்துக்கள் மற்றும் மஹவ பொதுநூலகத்தின் ரூபா 369,600 ஆன புத்தகங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 82,070 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியிலான நானாவிதபொருள் இருப்பு பெறுமதி ரூபா 699,340 ஆல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) ரூபா 18,200 தொகையான 14 மோட்டார் வேன் நீர் மானிகளின் பெறுமதி ரூபா 186,200 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,337,411 தொகையான நிலையான வைப்புக்கள் ரூபா 2,902,735 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு உப்பு வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2015 ஆம் ஆண்டிற்குரிய முற்பணம் ரூபா 2,500,000 ஆன முத்திரைக் கட்டண வருமானமொன்று மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஃ) மீளாய்வாண்டின் சம்பள மீள்நிரம்பல் ரூபா 54,237,684 மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரம்பல் ரூபா 20,209,015 முறையே ரூபா 55,960,877 மற்றும் ரூபா 10,632,875 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க்) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 358,208 ஆன நம்பள மீள் நிரம்பல் மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 583,208 ஆன தீர்வு செய்யப்படாத முற்பணம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 518,908 என காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) கணக்குகளுக்கிடையே பண மாற்றல் கணக்கில் ரூபா 22,908 ஆன வேறுபாடுநடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) மீளாய்வாண்டில் கணக்காய்வு கட்டணங்களுக்காக நிதி ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக 2018 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த கணக்காய்வு கட்டணங்கள் ரூபா 99,084 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கீ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 17,603,889 தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 18,117,589 என காண்பிக்கப்பட்டிருந்தது.

(கு) முன்னைய ஆண்டுகளில் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்படாத ரூபா 80,600 மீளாய்வாண்டின் போது நிலுவை ஏனைய வருமானங்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(கூ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 4,183,750 தொகையான நிலுவை நீதிமன்றத தண்டப்பணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,295,000 என குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான இறுதியில் கீழ் நிதிக்கூற்றுக்களில் 02 கணக்கு விடயங்களில் காணப்பட்ட மீதிகள் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளுக்கிடையே ரூபா 50,050,109 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 6,055,963 தொகையான வைப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,455,296 என காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 54,355,842 தொகையான கடன்பட்டோரிடமிருந்து ரூபா 35,108,292 இற்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. தகவல் இல்லாத ரூபா 6,666,978 ஆன முற்பண மீதியொன்றும் அதிகாரசபையிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 761,854 தொகை தீர்வு செய்யப்படாமல் நீண்டகாலமாகக் காணப்பட்டது.

iii. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓராண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 6,898,986 மீதி அறவிடப்பட வேண்டியுள்ளது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

i. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 55,750,084 செலுத்த வேண்டிய கணக்குகளில் ரூபா 51,668,018 இற்குரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 03 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 3,930,687 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

iii. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 10,455,295 ஆன வைப்புக்களில் மீளச் செலுத்தக் கூடிய வைப்புக்கள் இனங்காணப்பட்டு கொடுப்பனவு செய்யவோ வருமானத்திற்கு எடுக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 46,107,398 ஆன 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 218 | | - | சபைக்குச் சொந்தமான சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒருமுறை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவை | | | |
| | (i) | 5.6.1 (அ) வழிகாட்டல் கோவை | 145,241 | விதந்துரைகள் வழங்கப்படாமல் கொள்வனவு மேற் கொள்ளப்பட்டிருந்தன. |
| | (ii) | 6.3.3 (ஆ) வழிகாட்டல் கோவை | 597,200 | கூறுவிலை கோரும் போது திறந்த திகதி நேரம் மற்றும் இடம் என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | சபைக்குச் சொந்தமான ஓட்ட நிலைமையிலுள்ள 13 வாகனங்களில் அரசின் இலட்சிணை பொறிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | | 977,320 | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,884,906 ஆக இருந்ததுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 12,341,209 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபையினால் காசோலைகள் வழங்கும் போது இடம்பெற்ற தவறு ஒவ்வொரு மாதத்திலும் சரி செய்யப்படாததன் காரணமாக ரூபா 136,826 ஆன பெறுமதியொன்று வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் தொடர்ந்தும் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 4,990 | 5,772 | 5,070 | 3,036 | 5,290 | 5,502 | 5,773 | 2,334 |
| (ii) | வாடகை | 12,875 | 11,068 | 11,304 | 134 | 11,725 | 11,517 | 11,510 | 370 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 846 | 919 | 919 | - | 746 | 901 | 901 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 111,488 | 71,309 | 79,285 | 13,490 | 101,937 | 59,333 | 59,149 | 21,461 |
| | மொத்தம் | 130,199 | 89,068 | 96,578 | 16,660 | 119,698 | 77,253 | 77,333 | 24,165 |

**குறிப்பு**

2016 மற்றும் 2017 ஆண்டுகளில் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் ரூபா 130 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் பட்டியலிடல் ரூபா 89 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானத்துடன் ரூபா 97 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 17 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது.

### 2.3.3 வீதவரியும் வரிகளும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை அதிகாரப் பிரதேசத்தில் 1556 வீத வரி அலகுகளிலிருந்து ரூபா 2,827,256 ஆன வீத வரி அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 32-42 இன் பிரகாரம் நிலுவை வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 210 நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 314,822 தொகையான நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதிவரை சபை அதிகாரப் பிரதேசத்தில் 83 வியாபார அலகுகளிலிருந்துதும் 17 கைத்தொழில் பிரிவுகளிடமிருந்தும் முறையே ரூபா 152,040 மற்றும் ரூபா 16,500 ஆன வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3.4 வாடகை**

---------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 கடைகளிலிருந்து ரூபா 40,109 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 93,122 ஆன நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

--------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்து பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் தனித்தனியாக இனங்காணப்படாதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,874,642 தொகை பெறவேண்டியிருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**3.1 செயலாற்றல்**

----------------------

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

--------------------------

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட பொது உப வதிகளை சபையினால் பின்பற்றப்பட்டிருந்தன.

**(ஆ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

----------------------------------------------

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட ரூபா 3,340,522 தொகையான 02 நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக்கழிவகற்றல் பொருள் முகாமைத்துவம்**

------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அம்பன்பொல நகரில் சேரும் கழிவுகள் அமுனுகம பிரதேசத்தில் காணியொன்றில் வெளியேற்றப்பட்டிருந்ததுடன் ஆட்களாலும் அனுமதியின்றி இவ்விடத்தில் கழிவுப்பொருள் வெளியேற்றும் நிலைமையில் கண்ணாடித்

துண்டுகள், மீன் விற்பனை கூடங்களில் கழிவுகள் இவ்விடத்தில் ஆங்காங்கே இடப்பட்டிருந்தன.

(ii) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு 2017 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்படும் 490 தொன் அளவில் உக்கும் கழிவுகளில் 140 தொன் அளவில் கொம்போஸ்ட் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதுடன் எஞ்சியவை திறந்த பூமியில் இடப்பட்டு வந்தன.

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அமுனுகம காணியில் வெளியேற்றப்படும் பொலித்தீன் போன்ற உக்காத பொருட்கள் காணியில் இடப்படுவதாலும் தீ வைப்பதாலும் சுற்றாடல் சிக்கல் உருவாகக் கூடியதாக உள்ளது.

(ii) பியோதாகம கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் கம்பிவேலிகள் காட்டுயானைகள் உடைத்திருந்ததுடன் அமுனுகம பூமியில் கழிவுப்பொருட்களை கால்நடைகள் உணவாக எடுப்பதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கழிவுப் பொருட்கள் இடப்படும் காணிகளுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

-------------------------------------------------------------

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்காத போதிலும் வறுமையை ஒழிப்பதற்கு நோக்காக கொண்டு சபையினால் சேர, எலுமிச்சை மற்றும் தோடம்பழ பயிர்ச்செய்கை செயற்திட்டம், பசுமாடு செயற்திட்டத்தை செயற்படுத்துதல் உட்பட குடிநீர் வசதிகள் வழங்குதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை**

-------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் வருடக் கணக்காக இருந்து வரும் ரூபா 541,322 ஆன பஸ் நிறுத்துமிட நிர்மாணத்தின் இருப்புக்கள் பௌதீக ரீதியான இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் காணாமல் போன ரூபா 26,227 தொகையான 185 புத்தகங்களின் நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகன திருத்த வேலைகளின் போது அகற்றப்பட்ட உதிரிப்பாகங்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தி சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உப அலுவலகங்கள், நூலகங்கள், நீர், வடிகட்டி அறை மற்றும் முன்பள்ளி பாடசாலைகளின் நிலையான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்

(i) மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் மூன்றாம் நிலை பதவியொன்றும் 10 இரண்டாந்தர பதவிகளும் 11 ஆரம்ப பதவிகளிலும் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இரண்டாந் தர பதவிகளில் இரண்டு பேரும், ஆரம்ப தர பதவியணியொன்றில் ஒருவரும் மிகையாக காணப்பட்டனர். மேலும் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தினால் 19 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சபைக்கு இணைக்கப்பட்டிருந்தமையால் 7 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிகையாக இருந்தனர்.

(ii) 18 முன்பள்ளி பாடசாலை உதவியாளர்கள், 06 நூலக உதவியாளர்கள், 03 அலுவலக உதவியாளர்கள் மற்றும் 02 காவலாளிகள் அங்கீகாரம் இல்லாமல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(iii) நாளொன்றுக்கு குறைந்தது 10 ஊழியர்கள் மாத்திரம் தேவையான கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகளுக்காக 03 பேர் ஊழியர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### (ஆ) ஊழியர் கடன்

இடமாற்றம், சேவையை விட்டுச் செல்லல், வேலை இடைநிறுத்தம், மரணித்தல் போன்ற காரணங்களின் பேரில் 12 உத்தியோகத்தர்களிடமிருந்து 01 ஆண்டு முதல் 13 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 352,466 ஆன ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது ஆதனங்கள் மதிப்பீட்டின் பின்னர் 2014 முதல் 2017 திசெம்பர் வரை இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த 125 ஆதனங்களிலிருந்து வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆகக்குறைந்த கேள்வி ரூபா 1,086,104 ஆன 05 குத்தகை ஆதனங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது கேள்வி கோரப்பட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அம்பன்பொல பேருந்து நிலையத்தின் 9 கடைகளும் பால்நிலையமொன்றும் மஹவ பொது வியாபார சந்தையில் 14 கடைகளும் 03 ஆண்டுகளாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை

சியோதாகம மற்றும் கழிவுப்பொருள் நிலையத்தின் நிலையான சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்துவதற்காக பீ.எஸ் 45 மாதிரியின் பிரகாரம் பதிவேடென்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் இடம்பெறாமை

10 ஆண்டுகளுக்கு முன்னர் கொங்கிரீட் இடப்பட்டிருந்த அம்பன்பொல அமுனுகம வீதியின் 200 மீற்றர் அளவில் கொங்கிறீட் பகுதி கழன்று பாதத்தில் கருங்கற்கள் தோன்றி வீதியை பயன்படுத்துவதின் சிரமம் தொடர்பான வேண்டுகோளை சபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் 05 இயந்திரங்களை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பன்பொல நகரில் கழிவுப்பொருள் வெளியேற்றும் அமுனுகம அரச காணியை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.4 விளைவற்ற சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 771,700 பெறுமதியான 07 வாகனங்கள் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டன.

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாகாண கணக்கு குழு அறிக்கைகள் திட்டவட்டமாக குறிப்பிடப்படாதிருக்கையில் ரூபா 280,713 ஆன நிலுவை வாடகை மற்றும் ரூபா 7,333 ஆன நிலுவை கடை வாடகை திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3.7 பெறுகை

### 3.7.1 பெறுகை திட்டம்

2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 வழங்கல் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையொன்று இல்லாமல் ஆகக் குறைந்த விலையை விஞ்சி ரூபா 80,000 கூடுதலாக கொடுப்பனவு செய்து சபையின் கெப் வண்டிக்கு 04 டயர்கள் கொள்வனவு செய்வதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது.

(ஆ) திட்டவட்டமான காரணங்கள் குறிப்பிடப்படாமல் ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனம் நிராகரிக்கப்பட்டு வேறு நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 49,485 கூடுதலாக கொடுப்பனவு செய்து முன்னரங்கு அலுவலகத்திற்கு 23 கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.7.3 ஒப்பந்த நிர்வாகம்

2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சமுக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு நேரடி ஒப்பந்தங்களை கையளிக்கும் போது திணைக்களத் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயரிடப்படுகின்ற இரண்டு முகவர்களுடன் கூடிய மூன்று பேர் கொண்ட குழுவொன்றின் பரிந்துரைகள் மற்றும்

அச்சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி வசதிகள் அனுபவம் தொடர்பாக உறுதிப்படுத்தல் மற்றும் கோவைகள் என்பவற்றின் பிரகாரம் தகைமை மீளாய்வு செய்யப்படாமல் ரூபா 8,654,738 தொகையான 11 நிர்மாண வேலைகள் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 09 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 02 வருமான விடயங்கள் மற்றும் 06 செலவின விடயங்கள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே 33 சதவீதத்திலிருந்து 282 சதவீதம் வரையான விலகலொன்று காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான பாதீட்டுக் குருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதிடப்படாத ரூபா 11,054,847 ஆன 16 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 5(7) இன் பிரகாரம் நிதி மற்றும் களஞ்சிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக போதியளவு உள்ளக கணக்காய்வு முறைமையொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படாமை மற்றும் கணக்கீடு செய்யப்படாமல் இருந்தமை. |
| | (ii) | நிலையான வைப்பு வட்டி கணக்கீடு செய்யப்படாமை. |
| | (iii) | வருமானம் தவறுதலாக கணக்கீடு செய்தல் மற்றும் குறைத்துக் கணக்கிடல். |
| | (iv) | இணங்காத கணக்குகளை சீராக்கம் செய்யாமை |
| | (v) | புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பேணப்படாமை மற்றும் காணப்படும் ஆவணங்களை நாளதுவரையாக்காமை |

| | | |
|---|---|---|
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) பெறவேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை<br>(ii) காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை. |
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை<br>(ii) சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஈ) | செயற்திட்டங்களை செயற்படுத்துதல் | (i) நிர்மாணங்களுக்காக பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமை<br>(ii) பாதிடப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்தாமை<br>(iii) பாதிடப்படாத செயற்திட்டங்களை செயற்படுத்துதல் |
| (உ) | கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) பதிவேடுகள் பேணப்படாமை |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே போதியளவு வேறுபாடுகள் கதாணப்பட்டமை |